DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.311 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ரம்யா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரையில் எனது அண்ணன் வீட்டில் வசித்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ஆறுமுகம் எனது கணவர் ஆவார். எங்களுக்கு திருமணம் முடிந்தபிறகு நாங்கள மதுரை அவனியாபுரத்தில் வசித்து வந்தோம். எனது கணவர் Medical Ref ஆக பணிபுரிந்து வந்தார். கடந்த 19.06.2025 தேதி மதியம் 12 மணியளவில் எங்கள் வீட்டிலிருந்து வேலை நிமித்தமாக எனது கணவர் அவரது வேலைநிமித்தமாக தொண்டிக்கு செல்வதாக சொல்லி புறப்பட்டார். அதன்பின்

அன்றையதினம் மாலை 5.45 முதல் 6 மணியளவில் தொண்டி காவல் ஆய்வாளர் ஒருவர் எனக்குபோன் செய்து எனது கணவருக்கு தொண்டி காந்தி நகரில் விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் வீட்டில் பெரியவர்களிடம் போனை கொடுக்குமாறு தெரிவித்தார்.நான் எனது பக்கத்து வீட்டுக்காரரிடம் போனை கொடுத்தேன். உடனே நான் எனது அண்ணன் ரமேஷ், கோபிநான்,மலைசாமி ஆகியோரிடம் தகவல் தெரிவித்து நாங்கள் அன்று இரவு 12.00 மணியளவில் தொண்டிக்கு வந்து சேர்ந்தோம்.

2. தொண்டியில் வைத்து எனது அண்ணன் என்னிடம் எனது கணவர் விபத்தில் இறந்துவிட்டதாக தெரிவித்தார். உடனே நாங்கள் புறப்பட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார்கள். அந்த காரை யார் ஓட்டினார் என்று அது என்ன கார் என்றும் விபத்து எப்படி ஏற்பட்டது என்றும் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நாங்கள் 19.06.2025 தேதி தொண்டிக்கு புறப்பட்டு வந்ததும் காவல்நிலையம் சென்று விபத்து தொடர்பாக புகார் மனு அளித்தோம். புகார் மனுவை எனது அண்ணன்கள் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா,.ஆ.1 ஆ குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1,. எனது கணவர் இறப்பிற்கு காப்பீடு தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த காப்பீடு தொகையை பெறுவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.